71. கோள்களுக்கிடைப்பட்ட தொலைவை _______ என்ற அலகால் அளக்கிறோம்.

1. வானியல் அலகு 2. கி.மீ. 3. ஒளி ஆண்டு 4. நாட்டிகல் மைல்

72. விண்மீன்களுக்கிடைப்பட்ட தொலைவை _______ என்ற அலகால் அளக்கிறோம்.

1. வானியல் அலகு 2. கி.மீ. 3. ஒளி ஆண்டு 4. நாட்டிகல் மைல்

73. பின்வருவனவற்றுள் தவறான இணை எது?

1. ஃபிராக்ஸிமா சென்டாரி - புவியிலிருந்து 4.22 ஒளி ஆண்டு தொலைவு

2. பூமி - அண்ட மையத்திலிருந்து 25000 ஒளி ஆண்டு தொலைவு

3. ஒளி ஆண்டு - $9.46 \times 10^{15}$ மீ

4. வானியல் அலகு - $1.496 \times 10^{11}$ கி.மீ.

74. பின்வருவனவற்றுள் தவறான இணை எது?

1. 1 அடி - 30 மி.மீ.

2. 1 கேலன் - 3785 மி.லி.

3. 1 அவுன்ஸ் - 30 மி.லி

4. 1 குவார்ட் - 1 லி

75. ஒரு பொருள் பெற்றிருக்கும் வெப்பம் அல்லது குளிர்ச்சியின் அளவு _______ எனப்படுகிறது.

1. வெப்ப ஆற்றல் 2. வெப்பநிலை 3. வெப்பமானி 4. வெப்பநிலைமானி

76. ஒரு பொருளில் அடங்கியுள்ள மூலக்கூறுகளின் சராசரி இயக்க ஆற்றல் _______.

1. வெப்பம் 2. வெப்பநிலை 3. வெப்ப ஏற்புத்திறன் 4. அனைத்தும்

77. மின்னோட்டம் I = _______.

1. Q / t 2. Q × t 3. t / Q 4. 2 மற்றும் 3

78. இரு கோடுகள் அல்லது இரு தளங்கள் வெட்டிக் கொள்வதால் உருவாகும் கோணம் _______.

1. தளக்கோணம் 2. திண்மக்கோணம் 3. செங்கோணம் 4. ஐங்கோணம்

79. மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட தளங்கள் வெட்டிக் கொள்வதால் உருவாகும் கோணம் ___

1. தளக்கோணம் 2. திண்மக்கோணம் 3. செங்கோணம் 4. ஐங்கோணம்

80. பின்வருவனவற்றுள் முப்பரிமானம் கொண்டது எது?

1. தளக்கோணம் 2. திண்மக்கோணம் 3. செங்கோணம் 4. ஐங்கோணம்

81. தளக்கோணத்தின் அலகு _______.

LIVEWORKSHEETS

1. ரேடியன் 2. rad 3. 1 மற்றும் 2 4. 1 மட்டும்

82. திண்மக்கோணத்தின் அலகு ______.

1. ஸ்ட்ரேடியன் 2. sr 3. 1 மற்றும் 2 4. 1 மட்டும்

83. பின்வருவனவற்றுள் சரியானது எது?

1. $\pi$ ரேடியன் = 180°
2. 1 ரேடியன் = 180° / $\pi$
3. $\pi$ / 180° = 1 / ரேடியன்
4. அனைத்தும் சரி

84. 60° என்பதன் ரேடியன் மதிப்பு யாது?

1. $\pi$ ரேடியன் 2. $\pi$ / 2 ரேடியன் 3. $\pi$ / 3 ரேடியன் 4. $\pi$ / 4 ரேடியன்

85. $\pi$ / 4 ரேடியன் என்பதன் டிகிரி மதிப்பு யாது?

1. 60° 2. 45° 3. 30° 4. 15°

86. 30 K (-243.15 $^0$C) என்ற மிகக் குறைந்த வெப்பநிலையில், சில கடத்திகள் எந்த விதமான மின் இழப்பும் இன்றி மின்னோட்டத்தைக் கடத்துகின்றன. இக்கடத்திகள் ______ எனப்படும்.

1. குறைக்கடத்திகள் 2. மீக்கடத்திகள் 3. நற்கடத்திகள் 4. காப்பான்கள்

87. மீக்கடத்திகள் எங்கு பயன்படுகிறது?

1. கணினி நினைவகம், புல்லட் ரயில்
2. வீடுகள், கடைகள்
3. வாகனங்கள், கணினி
4. அனைத்தும்

88. பின்வருவனவற்றுள் தவறான இணை எது?

1. மின்னூட்டம் - கூலூம்
2. மின்னோட்டம் - ஆம்பியர்
3. ஒளிச்செறிவு - மோல்
4. ஒளிப்பாயம் - லூமென்

89. ஒலியின் அளவினை அளக்கப் பயன்படும் அலகு எது?

1. கேண்டிலா 2. ஆம்பியர் 3. டெசிபல் 4. வாட்

90. பின்வருவனவற்றுள் சரியான வரிசை எது?

1. மீட்டர் < கிலோமீட்டர் < ஒளி ஆண்டு < வானியல் அலகு
2. கிலோமீட்டர் < மீட்டர் < ஒளி ஆண்டு < வானியல் அலகு
3. மீட்டர் < கிலோமீட்டர் < வானியல் அலகு < ஒளி ஆண்டு
4. மீட்டர் > கிலோமீட்டர் > வானியல் அலகு > ஒளி ஆண்டு

LIVEWORKSHEETS

91. கூற்று 1: குவார்ட்ஸ் கடிகாரம் 1 / $10^9$ வினாடி துல்லியத்தன்மை கொண்டது.

கூற்று 2: அணு கடிகாரம் 1 / $10^{13}$ வினாடி துல்லியத்தன்மை கொண்டது.

கூற்று 3: சூரிய கடிகாரம், நீர் கடிகாரம் 1 / $10^2$ வினாடி துல்லியத்தன்மை கொண்டது.

(1) கூற்று 1 மட்டும் சரி (2) கூற்று 1,2 சரி

(3) கூற்று 2,3 சரி (4) அனைத்து கூற்றுகளும் சரி

92 ஒப்புமை தருக.

திரவம் : லிட்டர் : : திடப்பொருள் : ?

(1) மி.லி (2) கி.கி (3) செ.மீ (4) மீ

93. கூற்று: கல்லின் கனஅளவை அளவிடும் முகவை மூலம் அளக்கலாம்.

காரணம்: கல் ஒரு ஒழுங்கற்ற வடிவமுடைய பொருள்.

(1) கூற்று சரி. காரணம் தவறு (2) கூற்று தவறு. காரணம் சரி

(3) கூற்று மற்றும் காரணம் தவறு (4) கூற்று மற்றும் காரணம் சரி

94. கூற்று: மரக்கட்டை நீரில் மிதக்கும்

காரணம்: நீர் ஒளி ஊடுருவும் பொருள்.

(1) கூற்று சரி. காரணம் தவறு (2) கூற்று தவறு. காரணம் சரி

(3) கூற்று மற்றும். காரணம் தவறு (4) கூற்று மற்றும் காரணம் சரி

95. ஒரு கனமீட்டர் என்பது _______ கன சென்டி மீட்டர்

(1) 1000000 (2) 100000 (3) 10000 (4) 1000

96. பாதரசத்தின் அடர்த்தி _______ கிகி/மீ$^3$

(1) 13600 (2) 1000 (3) 10000 (4) 100

97. பொருத்துக.

a) பரப்பு - i) தள வடிவ பொருள்

b) நீளம் - ii) கயிறு

c) அடர்த்தி - iii) பருப்பொருளின் அளவு

d) நிறை - iv) கி / செமீ$^3$

(1) a - ii b - i c - iv d - iii (2) a - iii b - i c - iv d - ii

(3) a - i b - ii c - iv d - iii (4) a - i b - iii c - iv d - ii

98. ஒளிச்செறிவு என்பது _______ ன் ஒளிச்செறிவாகும்.

(1) லேசர் ஒளி (2) புற ஊதாக்கதிர் (3) கண்ணுறு ஒளி (4) அகச் சிவப்புக்கதிர்

LIVEWORKSHEETS

99. பொருத்துக.

a) வெப்பநிலை - i) உண்மையான மதிப்பின் நெருங்கிய அளவு

b) தளக்கோணம் - ii) வெப்பம் அல்லது குளிர்ச்சியின் அளவு

c) திண்மக்கோணம் - iii) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அளவீடுகளின் நெருங்கிய தன்மை

d) துல்லியத்தன்மை - iv) மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட தளங்களின் குறுக்கீட்டினால் ஏற்படும் கோணம்

e) நுட்பம் - v) இரண்டு தளங்களின் குறுக்கீட்டினால் ஏற்படும் கோணம்

(1) a - ii b - v c - iv d - i e - iii (2) a - iii b - i c - iv d - ii e - iv

(3) a - i b - ii c - iv d - iii e - v (4) a - i b - iii c - iv d - ii e - v

100. கூற்று : SI அலகுமுறை அளவீடுகளுக்கான மிகச்சரியான அலகுமுறையாகும்.

காரணம் : வெப்பநிலையின் SI அலகு கெல்வின் ஆகும்.

(1) கூற்று மற்றும் காரணம் சரி. மேலும் காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கம்.

(2) கூற்று மற்றும் காரணம் சரி. மேலும் காரணம் கூற்றுக்குச் சரியான விளக்கம் அல்ல.

(3) கூற்று மற்றும் காரணம் தவறு

(4) கூற்று தவறு மற்றும் காரணம் சரி

101. கூற்று (A): திண்மக்கோணத்தின் அலகு ரேடியன்.

கூற்று (B): ஒரு வட்டத்தின் ஆரத்திற்குச் சமமான வில் ஒன்று வட்டத்தின் மையத்தில் ஏற்படுத்தும் கோணமே ஒரு ரேடியன் எனப்படும்.

(1) கூற்று (A), (B) சரி (2) கூற்று (A) மட்டும் சரி

(3) கூற்று (B) மட்டும் சரி (4) கூற்று (A), (B) தவறு

**NMMS தேர்வில் கேட்கப்பட்ட வினாக்கள்:**

102. 36 கி.மீ/மணி = _______ மீ/விநாடி (NMMS - 2015 - 2016)

(1) 1 (2) 10 (3) 100 (4) 1000

103. ஒரு நேனோமீட்டர் என்பது _______. (NMMS - 2015 - 2016)


(1) $10^{-9}$ மீட்டர் (2) $10^{9}$ மீட்டர் (3) $10^{-8}$ மீட்டர் (4) $10^{8}$ மீட்டர்

104. கடல் மட்டத்தில் வளிமண்டல அழுத்தத்தின் மதிப்பு _______. (NMMS - 2015 - 2016)

(1) $10^3$ N/$m^2$ (2) $10^4$ N/$m^2$ (3) $10^5$ N/$m^2$ (4) $10^2$ N/$m^2$

105. கீழே கொடுக்கப்பட்ட படத்தில் சிறிய கனச்சதுரம் ஒன்றின் பக்கம் 2 செ.மீ எனில் பெரிய கனச்சதுரத்தின் பருமன் யாது? (NMMS - 2016)

LIVEWORKSHEETS




(1) 8 செ.மீ$^3$

(2) 64 செ.மீ$^3$

(3) 192 செ.மீ$^3$

(4) 32 செ.மீ$^3$